"DAILY THANTHI"

PAGE NO: 08

DATE: 04.02.2021



# சதுப்பு நிலக்காடுகள் குறித்த விழிப்புணர்வு

புதுச்சேரி, பிப்.4-

சதுப்பு நிலக்காடுகளின் பாதுகாப்பிற்காக ராம்சார் கன்வென்சன் என்ற அமைப்பு சர்வதேச அளவில் செயல் பட்டு வருகிறது. இதில் இந்தியாவும் அங்கம் வகிக்கிறது. இதன் 50-வது ஆண்டு நிறைவு விழாவினை கொண்டாடும் வகையில் சதுப்பு நிலமும் நீரும் என்ற தலைப்பில் பொதுமக்கள் மற்றும் மாணவ, மாணவிகள் இடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பல்வேறு போட்டிகளை சர்வதேச அளவில் நடத்தி வருகிறது. இதன் அடிப்படையில் புதுவை பல்கலைக்கழக வனம் மற்றும் வனவிலங்கு துறை, வேளாண் துறை, கல்வித் துறையுடன் இணைந்து இந்த தினம் புதுவை பல்கலைக் கழகத்தில் கொண்டாடப்பட்டது.

விழாவில் 5 குறுந்தலைப்புகளுக்குள் அடங்கிய சதுப்பு நிலக்காடுகள் பசுமை நெறிமுறையை துணைவேந்தர் குர்மீத் சிங், துணை வனக்காப்பாளர் வஞ்சுளவல்லி ஆகியோர் வெளியிட்டனர். நிகழ்ச்சியில் பல்கலைக்கழக இயக்குனர் பாலகிருஷ்ணன், வேளாண் இயக்குனர் பாலகாந்தி, பதிவாளர் சித்ரா, பேராசிரியர்கள் தேவிபிரசாத், நளினி, சாகின் சுல்தானா, என்ஜினீயர் சங்கரமூர்த்தி உள்பட பலர் கலந்து கொண்டனர். இந்த விழாவினை சிறப்பிக்கும் வகையில் பள்ளிக்கல்வி இயக்குனர் ருத்ரகவுடு 400-க்கும் மேற்பட்ட பள்ளிகளில் ஓவியப்போட்டி நடத்த உள்ளார்.